**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,</u>**
**<u>ஜெயங்கொண்டம்.</u>**
**<u>C.C.No. 43/2018</u>**

பெயர்– திரு. வேலுச்சாமி அ.சா.11
த/பெ.சண்முகம் நாள் – 17.06.2026

( எதிரி ஆஜரில்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது)

**<u>சாட்சி மனுவில் பேரில் ஆஜர்படுத்தப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன் பேரில் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது விசாரணையில் அ.சா.1 டயர் வெடித்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.2 ம் விபத்திற்கு காரணம் வாகனத்தின் டயர்வெடித்ததுதான் காரணம் வேறு எதுவும் காரணமில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் இல்லை. அ.சா.1, அ.சா.2 எனது விசாரணையில், விபத்திற்கு காரணம் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) அ.சா.4 சபரிநாதன், அ.சா.5 சக்திவேல் ஆகியோர் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு வந்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். அ.சா.6 ராஜா விபத்திற்கு காரணம் வாகனத்தின் டயர்வெடித்ததுதான் என்றால் இல்லை. அ.சா.6 விபத்திற்கு காரணம் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டியது காரணமில்லை என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.8 அன்பழகன் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல்அறிக்கை சம்பவம் நடந்து 6 நாட்கள் ஆனபிறகுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

3) இந்த வழக்கின் சம்பவத்திற்கு முழு காரணமும் வாகனத்தின் டயர் வெடித்ததுதானா என்றால் இல்லை. நான் வேண்டுமென்றே உண்மையை மறைத்து எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டியதால்தான் விபத்து ஏற்பட்டது என்று இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நான் Mistake of Fact

என்று முடித்து வைத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. வேண்டுமென்றே இந்த வழக்கை நான் பொய்யாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.